# கலாதீபம்

කලාදීබම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.01.2026 | தீபம் 42


# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்

# 49 ஆவது கலைமலர் சஞ்சிகை வெளியீடு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு விழா 10.12.2025 புதன்கிழமை காலை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடை பெற்றது

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப் பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா கலந்துகொண்டு சஞ்சிகையினை வெளியிட்டு வைத்தார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை கலாசாலையின் முன் னாள் அதிபர் வீ.கருணலிங்கம் பெற்றுக் கொண்டார்.

கலைமலர் சஞ்சிகையின் பதிப்பாசிரியரும் விரிவுரை யாளருமாகிய வே.சேந்தன் பதிப்பாசிரியர் உரை ஆற்றி னார். கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் நன்றியுரை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

102 வருட கலாசாலை பாரம்பரியத்தில் இது 49 ஆவது சஞ்சிகை ஆகும். 240 பக்கங்களுடன் இச் சஞ்சிகை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்**

01.12.2025 — 31.12.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் ஆசிரிய கலாசாலைகளுக்கான இறுதி பரீட்சை நடைபெற்றது

2023/2024 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்காக தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் இறுதி பரீட்சை 15.12.2025 திங்கட்கிழமை தொடக்கம் 17.12.2025 புதன் கிழமை வரை நடைபெற்றது.

2023/2024 கல்வியாண்டு அணியினருக்கான கற்கைநெறி 2025 டிசம்பர் மாதம் 12ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ள போதிலும் பரீட்சைக்கு குறித்த தினங்களில் ஆசிரிய மாணவர்கள் சமூகமளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்கான மதிப்பீடுகள் யாவும் தேசிய கல்வி நிறுவகத்தினரால் குறிப்பிடப்படும் தினங்களில் 2026 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெறும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

## ஆசிரிய கலாசாலைகளுக்கான விடுமுறை

கல்வி அமைச்சினால் கலாசாலைகளுக்கு வழங்கப்படும் தவணை விடுமுறையானது 12.12.2025 வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியது.

மீளவும் புதிய ஆண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக 05.01.2026 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான விடுமுறையே தவிர கலாசாலை அலுவலகப் பணிகள் யாவும் வழமைபோல் இயங்கும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

# கலாதீபம்

කලාදීප KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### உயர்கல்வியின் சமகாலப் போக்கு

இன்றைய உலகில் உயர்கல்வி பல்வேறு மாற்றங்களையும் புதுமைகளையும் அனுசரித்து வளர்ந்து வருகிறது. அறிவு சார்ந்த பொருளாதாரம், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவை உயர்கல்வியின் சமகாலப் போக்குகளை தீர்மானிக்கும் முக்கிய காரணிளாக உள்ளன. பாரம்பரிய வகுப்பறை கற்பித்தலிலிருந்து மாறி, டிஜிட்டல் மற்றும் கலப்பு (Blended) கற்றல் முறைகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், திறன் அடிப்படையிலான கல்வி (Skill-based Education) முக்கியத்துவம் பெறுகிறது. சான்றிதழ்கள், குறுகிய காலப் பயிற்சிகள், தொழில்முறைப் பயிற்சிகள் மூலம் மாணவர்கள் உடனடி வேலைவாய்ப்புக்கு தயாராகிறார்கள். ஆராய்ச்சி மற்றும் புதுமை (Research & Innovation) உயர்கல்வியின் மையமாக மாறி, தொழில்துறை–பல்கலைக்கழக இணைப்புகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

சர்வதேசமயமாக்கலும் (Internationalization) ஒரு முக்கியப் போக்காகும். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கூட்டு திட்டங்கள், மாணவர் பரிமாற்றங்கள் மற்றும் இரட்டை பட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

மொத்தத்தில், உயர்கல்வியின் சமகாலப் போக்கு தொழில்நுட்பம், திறன், புதுமை மற்றும் உலகளாவிய பார்வை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, எதிர்கால சமூகத்திற்குத் தயாரான மனித வளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நன்றியுடன் கலாதீபம்

2026 ஜனவரியில் கலாசாலையில் 09 ஆசிரிய மாணவர் மாத்திரம் கற்கும் சூழல் ஏற்பட்டுள்ளமையாலும் ஆசிரியர் கலாசாலைக்கென புதிய ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்படாமையாலும் கலாதீபம் வெளியீட்டை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தேசித்துள்ளோம். கலாதீபம் வெளியீட்டிற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

கலாதீபத்தின் அனைத்து இதழ்களையும் www.noolaham.org இல் பார்வையிடலாம்.

ஆ-ர்

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றம் வழங்கிய விசேட கௌரவிப்பு

2024,2025 காலப்பகுதியில் கலாசாலையின் ஊடக மன்றச் செயற்பாடுகளுக்கு ஆதரவாக கலாசாலை நிகழ்வுகளை ஆவணப்படுத்து முகமாக புகைப்படப்பிடிப்பு மேற்கொண்ட விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் மு.கஜேந்திரன் (ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப் பாண கல்லூரி) அவர்களுக்கு விசேட கௌரவம் வழங்கப்பட்டது.

இவ்விசேட கௌரவத்தினை கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்ப் பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா மேற்கொண்டார்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் மற்றும் ஊடக மன்றக் காப்பாளர் தர்ஷினி முத்துராஜா ஆகியோரும் உடனிருந்தனர்.



# News in Brief - Month of December

**09.12.2025**
**Oli Vizha**

The Oli Vizha was held on Tuesday, at 8.30 am at Rathilakshmi Hall under the chairmanship of Principal S.Laleesan.

Former Principal of Palaly Teachers' College, M. Ignatius, attended the event as the chief guest.

The special guests was Rev.Fr.S.Duke Winson (Director, Diocesan office of Religious Education, Jaffna) The Holy Mass was Conducted by Rev.Fr. S. Duke Winson.

## 10.12.2025

## 49th Kalaimalar Magazine Launching Ceremony at Kopay Teachers' College.

The event, chaired by Principal S.Laleesan, was attended by the Vice-Chancellor, University of Jaffna, Professor S. Srisatkunarasa, as the chief guest and launched the magazine.

The first copy of the magazine was received by the former Principal of the college, V. Karunalingam. This is the 49th magazine in the 102-year tradition of the college. It is noteworthy that this magazine has been published with 240 pages.

## Special honor given by the Media Club

A Special honor was given by the Media club to M. Kajendran (Teacher, Vaddukoddai, Jaffna College), Teacher Student for science Course for documenting the College activities by photographing in the year 2024,25. The prof.S.Srisatkunarasa,VC, University of Jaffna honored the Teacher Student. The College Principal S.Laleesan and Dharshini Muthurajah, Petron of Media Club were accompanied.

**Navalar Guru pooja at Kopay Teachers' College**

Sivathiru Vishnukumar Vishnuyan participated as the guest speaker at this event.

**11.12.2025**

**Farewell for the 2023/24 batch of Teacher Stdents at Kopay Teachers' College**

The events began with the lighting of the auspicious lamp at the Rathi Lakshmi Hall, led by the Principal of the College, S.Laleesan. Following this, the second year Teacher Students were felicitated by the first year Teacher Students . All these events were moderated by the first year Teacher Students.

Finally a musical performance was held featuring performances by Teachers Students, and lecturers, with music provided by Anton's 'Friends' musical group formed by the college alumni.

## 11.12.2025

## Farewell Day

Mrs. Powsilkaniya Panchalingam (Powsi. Miss), Lecturer in Home Economics, who worked as an Attached Lecturer at Kopay Teachers' College for many years, retired on Thursday, 11.12. 2025, at the age of 60.

## 12.12.2025

## Blooming Buds - Poetry Book was launched

The event was held under the chairmanship of the Principal santhiramouleesan Laleesan.

The collection of poems written by English Course Teacher Students was published in an English language anthology through the efforts of lecturer Sujeeva Arullingam.

Mrs. Indramathi Ramachandra, former lecturer at Palaly Teachers' College, participated as the chief guest and released the book of poetry.

# சிறப்புற இடம்பெற்ற கலாசாலையின் உபஅதிபர் திருமதி சத்தியா ரஞ்சிற் அவர்களின் மணிவிழா

கலாசாலையின் உப அதிபர் சத்தியா ரஞ்சிற் இன் மணிவிழா நிகழ்வு 04.12.2025 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கலாசாலையில் இடம்பெற்றது.

யோகலிங்கேஸ்வர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து தவில் நாதஸ்வர இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற மணி விழா நிகழ்வுகளில் பேராசிரியர் க.தேவராசா பேராசிரியர் ஜெயலஷ்மி இராசநாயகம் இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ராஜினி சுப்பிரமணியசர்மா யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர்களான வே.கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம், பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபர் இக்னேசியஸ் டாக்டர் திருநாவுக்கரசு உள்ளிட்ட நூற்றுக் கணக்கானோர் கலந்து சிறப்பித்தனர்.

மணி விழாவை ஒட்டி சத்திய ரஞ்சிதம் என்ற மணி விழா மலரும் வெளியிட்டு வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கலாசாலையிலும் வேறு கற்கை துறைகளையும் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் பங்குகொண்டு சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.













# கலாசாலையில் சிறப்புற நடைபெற்ற ஒளி விழா நிகழ்வுகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்திய ஒளி விழா 09.12.2025 செவ்வாய் காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் ம.இக்னேசியஸ் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சென்ற் அடிகளார் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

காப்பாளர் உரையினை கிறீஸ்தவ மன்றக் காப் பாளர் திருமதி பிரபாலினி தனம் ஆற்றினார்.

ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன

இதில் இடம்பெற்ற கவி அரங்கை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் நெறிப்படுத்தினார்.

நாடக ஆற்றுகையை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் நெறிப்படுத்தினார்.

ஒளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம் பெற்றது

நத்தார் தாத்தா வருகையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.














# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 10.12.2025 புதன் காலை 8.30 மணிக்கு நாவலர் குரு பூசை இடம் பெற்றது.

கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் முதலாவதாக கலாசா லையில் எழுந்தருளி உள்ள நாவலர் திரு வுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர்தூவி வணக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக சிவத்திரு விஷ்ணுகுமார் விஷ்ணுயன் கலந்துகொண்டார்.

அதிதிக்கான அறிமுக உரையினை இந்து மன்றக்காப்பாளர் கு.பாலசண்முகன் ஆற்றினார்.

கலாசாலை அதிபர் நிறைவுரை ஆற்றினார்.

அதிதிப் பேச்சாளர் முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.









# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற 2023/2024 ஆம் அணி ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார விழா

2023 /24 ஆம் அணி ஆசிரிய மாணவர்களின் பிரிவு உபசார விழா 11.12.2025 வியாழக்கிழமை காலை 8:30 மணிக்கு கலாசாலையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது அதிபர், பிரதி அதிபர்கள் ,முகாமைத்துவ குழுவினர் மற்றும் விரிவுரையாளர்கள் கலாசாலை வாயிலிருந்து மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டடனர்.

ரதி லட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் தலைமை உரையினை அதிபர் ஆற்றினார்

அவரைத் தொடர்ந்து பிரதி அதிபர்கள் மாணவர் மன்றக் காப்பாளர்களான பொ. சற்குணநாதன் மற்றும் சிவலோசனி சுரேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

அவர்களைத் தொடர்ந்து கற்கைநெறிகளுக்கு பொறுப்பு விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களது தொழில் வாண்மையை பாடசாலைகளில் விருத்தி செய்தல் பற்றி விளக்கம் அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து முதலாம் வருட ஆசிரிய மாணவர்களால் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் சின்னம் சூட்டி கௌரவிக்கப் பட்டனர்.

இந்நிகழ்வுகள் யாவும் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களால் நெறிப்படுத்தப்பட்டது.

நிறைவாக கலாசாலை பழைய மாணவர் அன்ரனின் பிரண்ட்ஸ் இசைக் குழுவினர் இசையில் ஆசிரியர் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் வழங்கிய இசை நிகழ்ச்சி இடம் பெற்றது.










# திருமதி பௌசில்கனியா பஞ்சலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்றார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இணைப்பு விரிவுரையாளராக பல வருட காலமாக பணியாற்றிய மனைப்பொருளியல் விரிவுரையாளர் திருமதி பௌசில்கனியா பஞ்சலிங்கம் (பௌசி. மிஸ்) அவர்கள் 11.12. 2025 வியாழக்கிழமை அகவை 60 எய்தி ஓய்வு பெற்றார்.

அதனை முன்னிட்டு கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் தேநீர் விருந்துபசாரம் ஒன்றினை வழங்கி இருந்தார்.

அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருமதி பௌ.பஞ்சலிங்கம் அவர்களை கலாசாலை சமூகத்தினர் கேக் வெட்டுவித்தும் பொன்னாடை போர்த்தியும் மலர் மாலை சூட்டியும் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபர் வீ. கருணலிங்கம் ஓய்வு நிலை உப அதிபர் சத்தியா ரஞ்சித் மற்றும் ஓய்வு நிலை விரிவுரையாளர் திருமதி மு. ஜெயக்குமாரி மற்றும் திருமதி அனுஷா சஜீவினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.















# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் Blooming Buds என்ற ஆங்கில கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு

Blooming Buds என்ற ஆங்கில கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு 12. 12.2025 வெள்ளி காலை 9 மணிக்கு கலா சாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடை பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விரிவுரையாளர் சுஜீவா அருள் லிங்கத்தின் கவிதை தொகுப்பு முயற்சி யால் ஆங்கில மொழித் தொகுப்பாக் கத்தில் ஆங்கிலநெறி ஆசிரிய மாண வர்கள் எழுதிய கவிதைகள் நூலாக வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரி வுரையாளர் திருமதி இந்திரமதி இராமச் சந்திரா அவர்கள் கலந்துகொண்டு கவி தை நூலை வெளியிட்டு வைத்தார்.









# சிறப்புற இடம்பெற்ற கலாசாலையின் உபஅதிபர் திருமதி சத்தியா ரஞ்சிற் அவர்களின் மணிவிழாத் தொகுப்பு















# கலாசாலையில் சிறப்புற நடைபெற்ற ஒளி விழா நிகழ்வுகளின் தொகுப்பு











இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.01.2026 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது